இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 231 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 19 – வியாழக்கிழமை 02 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 231 : Thiruvalluvar Year - 2057 - Panguni 19 - Thursday 02 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00





## அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு தாய் தமிழ்நாட்டைக் காத்திட

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு படுதோல்வியைப் பரிசாகத் தாரீர்!

## திருச்சியில் சுட்டெரிக்கும் வெயிலில் திரண்ட மக்கள் கடலிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**திருச்சி, ஏப். 2 –**

**திருச்சியில் சுட்டெரிக்கும் வெயிலில் பல்லாயிரவர் திரண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, “அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு தாய்தமிழ் நாட்டைக் காத்திட அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணிக்கு படுதோல்வியைப் பரிசாகத் தாரீர்” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.04.2026) திருச்சியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு: –

நேற்று மாலை திருவாரூரில் பரப்புரை யைத் தொடங்கினேன். இன்று தீரர்கள் கோட்டமாம் திருச்சிக்கு வந்திருக்கிறேன். மூன்று வாரத்திற்கு முன்புதான், இதே திருச்சியில் மாபெரும் மாநில மாநாட்டிற் காக வந்தேன்! இப்போது மீண்டும் நம்முடைய வெற்றி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்க வந்திருக்கிறேன். மீண்டும் மீண்டும் நான் திருச்சிக்கு வருவது போன்று, திராவிட மாடல் ஆட்சி யும் மீண்டும் மீண்டும் வர வேண்டும்! அதற்கு நீங்கள் தயாரா?

கடந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மாவட்டத்தில் இருக்கும் 9 தொகுதிகளிலும் நீங்கள் வெற்றியைக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் தந்த அந்த வெற்றியால், இரண்டு சிறப்பான அமைச் சர்களைத் தமிழ்நாட்டிற்கு நீங்கள் தந்தி ருக்கிறீர்கள்! இந்த முறையும் திருச்சியில் முழு வெற்றி. நூறு சதவிகிதம் வெற்றி யைத் தருவீர்களா? தருவோம் (மக்கள்). மகிழ்ச்சி, நன்றி!

### தி.மு.கழக கூட்டணி வேட்பாளர்களை ஆதரிப்பீர்!

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதி யின் நமது வெல்லும் வேட்பாளர் திருச்சி யின் தீரர் மாநாட்டு நாயகர் – கழகத்தின் முதன்மைச் செயலாளர் – என்னுடைய ஆருயிர் சகோதரர் கே.என். நேரு அவர் களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

## தமிழ்நாட்டின் பெயரையே ‘தட்சிண பிரதேஷ்’ என்று மாற்றிவிடுவார்கள்!

அடுத்து, திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியின் நமது வெல்லும் வேட்பாளர் அருமைத் தம்பி அன்பில் மகேஸ் பொய்யா மொழி, என்னுடைய ஆருயிர் நண்பன் அன்பில் பொய்யாமொழி அவர்களின் அருமை மகன். எப்போதும் சிரித்த முகத் துடன், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவரும் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர் களுக்கு, திருவெறும்பூர் மக்கள் உதய சூரியன் சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை அளித்து, வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் நமது வெல்லும் வேட்பாளர் சகோதரர் இனிகோ இருதயராஜ் அவர் கள், சிறுபான்மை மக்களுக்காக என்னி டம் எப்போதும் பேசி, எதையும் சாதிக்கும் ஆற்றலைப் படைத்தவர். தொகுதி மக்களு டன் ஏற்கனவே இரண்டறக் கலந்தவர். நல்ல Weightஆன வேட்பாளர். சகோதரர் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, திருச்சி கிழக்கு தொகுதி மக்கள் வெற்றி யைத் தேடித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, லால்குடி சட்டமன்றத் தொகு திக்கு நமது வெல்லும் வேட்பாளர் பாரிவள் ளல் அவர்கள், அவருடைய பெயருக்கு ஏற்றவாறு, மக்களுக்கு நிச்சயம் தொண் டாற்றக் கூடியவர். கழகத்திற்காக உழைத்த தந்தை தங்கவேல் அவர்கள் வழியில் வந்திருக்கும் தம்பி பாரிவள்ளல் அவர்களுக்கு, லால்குடி உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்து, வெற்றியைத் தேடித் தந்திட வேண்டும்.

அடுத்து, மண்ணச்சநல்லூர் சட்ட மன்றத் தொகுதியின் நமது வெல்லும் வேட்பாளர் கதிரவனுக்கு நீங்கள் ஆதரவு தந்திட வேண்டும். தொகுதி மக்களுக்காக கடந்த 5 ஆண்டுகளாக எண்ணற்ற திட் டங்களையும், உதவிகளையும் செய்தவர். அப்படிப்பட்ட தம்பி கதிரவனுக்கு உதய சூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை நீங்கள் அளிக்க வேண்டும்.

அடுத்து, திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியின் நமது வெல்லும் வேட்பாளர் எஸ்.துரைராஜு அவர்கள், இவர் தொகுதிக் குட்பட்ட அந்தநல்லூர் ஒன்றியத்தின் பெருந்தலைவராக 2 முறை சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். இப்போது, திருவ ரங்கம் தொகுதியில் போட்டியிடும் அவ ருக்கு, அந்தத் தொகுதி மக்கள் உதயசூரி யன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, மணப்பாறை சட்டமன்றத் தொகுதி, அங்கு நமது வெல்லும் வேட்பா ளர் மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த சகோதரர் அப்துல் சமது அவர்கள், கூட்ட ணிக் கட்சியைத் சார்ந்திருந்தாலும், நமது உதயசூரியன் சின்னத்தில் அவர் போட்டி யிடுகிறார். கடந்த முறை போன்றே, இந்த முறையும் அவருக்கு உங்கள் பொன் னான வாக்குகளை அளித்து, அவரை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றியைத் தேடித் தந்திட வேண்டும்.

அடுத்து, முசிறி சட்டமன்றத் தொகுதி நமது வெல்லும் வேட்பாளர் தம்பி கருணை ராஜா அவர்கள், மறைந்த முன் னாள் அமைச்சர் செல்வராஜ் அவர்களின் அருமை மகன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் – பொறியாளர் அணியின் பொறுப்பில் இருந்து பணியாற்றுபவர் – கருணா ராஜாவுக்கு நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் முசிறி மக்கள் உங்கள் பொன் னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, துறையூர் சட்டமன்றத் தொகுதி – நம்முடைய தோழமை இயக்கமான காங்கிரசு இயக்கத்திற்கு அந்தத் தொகுதியை ஒதுக்கியிருக்கிறோம். விரைவில் நம்மு டைய அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் அறிவிக்க இருக்கும் காங்கிரசு கட்சியின் வேட்பாளருக்குத் துறையூர் மக்கள் கை சின்னத்தில் உங்கள் பொன் னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

### வேட்பாளர்களின் வெற்றி உறுதியாகிவிட்டது!

இங்கே, இந்த மேடையில் இப்போது நின்று கொண்டிருக்கும் 8 வேட்பாளர்களுக் கும், அதேபோன்று அறிவிக்க இருக்கும் காங்கிரசு கட்சியின் வேட்பாளரையும் சேர்த்து திருச்சி மாவட்டத்தில் இருக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி யின் 9 வேட்பாளர்களுக்கும் உங்க ளின் பொன்னான வாக்குகளை நீங்கள் வழங்கி வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன்... பண்போடு கேட்கிறேன்... பாசத்தோடு கேட்கிறேன்... உரிமையோடு கேட்கிறேன்... உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கேட்கிறேன்... வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). வெற்றி உறுதியாகிவிட்டது, வேட்பாளர்கள் உட்காரலாம். உங்களுக்கு சீட் கொடுக்கப் பட்டுவிட்டது.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்